Dhinathdhalam@gmail.com
www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**
தமிழகம் முழுவதும் 234
சட்டமன்ற தொகுதிகளுக்கும்
செய்தி – விளம்பரம்
சேகரிக்க முழு நேர – பகுதி நேர
பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.
☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556
நடுநிலை நாளிதழ்
DHINATH DHALAM Tamil & English daily Paper

**செய்தியாளர்கள் தேவை**
தமிழகம் முழுவதும்
மாவட்டம் & தாலுகா
வாரியாக சந்தாதாரர்
அடிப்படையில்
ஆண்/பெண்
நிருபர்கள் தேவை
☎ 94440 82959

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,
நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 063 | செவ்வாய்க்கிழமை Tuesday | 02.06.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# ஊழல், லஞ்சம் இல்லாத ஆட்சியை கொடுப்பேன்

## திருச்சியில் நன்றி தெரிவிக்கும் நிகழ்வில் முதலமைச்சர் விஜய் பேச்சு



தலைமைச்சராக பொறுப்பேற்ற பின்னர் முதன்முறையாக 'நன்றி தெரிவிக்கும் நிகழ்வில்' பங்கேற்க முதலமைச்சர் ஜோசப் விஜய், திருச்சிக்கு வந்தார். தொடர்ந்து தனியார் கல்லூரி வளாகத்தில் நடந்த மைதானத்தில் நடந்த கூட்டத்தில் பேசினார்.

கூட்டத்தில் பேசிய முதலமைச்சர் ச.ஜோசப் விஜய், "தேர்தல் ஆணையத்தை பொறுத்தவரை நான் பெரம்பூர் எம்.எல்.ஏ. ஆனால், என்னை பொறுத்தவரை தமிழ்நாட்டிற்கு எப்படி திருச்சி இதயம் போன்றதோ, அப்படி என் இதயத்தில் இருப்பது,திருச்சி கிழக்கு தொகுதி.

ஆட்சி அமைத்த பிறகு ஆறு மாதம் எதுவும் பேசமாட்டோம் என சொன்னவர்கள் எல்லாம், ஆறு நாளிலேயே புலம்ப ஆரம்பித்துவிட்டார்கள். கல்யாண வீட்டில் எல்லாம் புலம்புகிறார்கள். எம்.ஜி.ஆர்.-ன் முதல் தேர்தலில்கூட இந்த அளவுக்கு வாக்கு சதவிகிதம் வாங்கவில்லை என சொன்னார்கள். ஆனால்,தவெகவுக்கு அவ்வளவு வாக்குகள் கொடுத்துள்ளீர்கள். ம எ உண்மையில் மக்கள் மனசை புரிந்துவைத்திருந்தால் மக்களை இப்படி பேசமாட்டீர்கள். அவர்களுக்கு வாக்களித்தவர்கள் எல்லாம் நல்லவர்களாம், நமக்கு வாக்களித்தால் கெட்டவர்கள் என்றும்,தற்குறிகள் என்றும் பேசுகிறார்கள்.அண்ணாஆரம்பித்த கட்சியை அடிமையாக்கியது யார் சார்? திமுக தோற்றதற்கு காரணம் உங்கள் குடும்பத்தை கேளுங்கள் என உங்கள் உடன் பிறப்புகள் சொல்கிறார்கள். நீங்கள் மக்களை தப்பாக பேசினால் இந்த விஜய் கேட்பான். இது இன்று மட்டுமல்ல என்றும் இதுதான் நிலை.

நாம் ஆட்சிக்கு வருவதற்கு முன் நம்மைதடுக்க என்னென்ன சதிகள் எல்லாம் நடந்தது. ஆக்கப்பூர்வமான எதிர்க்கட்சியாக செயல்பட்டு மக்கள் மனதை வெல்ல பாருங்கள். 200 யூனிட் மின்சாரம் தொடர்பாக அறிவித்தோம். அதில் 100 யூனிட் மின்சாரம் திமுககொடுத்தது அல்ல, ஜெயலலிதா கொடுத்தது. ஆட்சி போன மனவேதனையில் ஸ்டாலின் அறிக்கையாக அ னக்கு எதிரிகளே இல்லையா என்றால், அப்படி நான் நினைக்கவில்லை. இப்போதும் நான் சொல்கிறேன், அரசியலில் திமுகவுக்கும் - திமுகவுக்கும் இடையேதான் போட்டி. இதற்கிடையில்,மற்றவர்களுக்கு வேலையே இல்லை. இந்த திமுகவும், மற்றும் பலரும் சேர்ந்துக்கொண்டு விஜய் வந்துவிடக்கூடாது என ஐந்து நாட்கள் ஆட்டம் போட்டார்கள்.

உங்களுக்கு நல்லது செய்ய வந்த விஜய்யா, அல்லது என்னை ஆட்சி அமைக்கக்கூடாது என நினைத்த ஸ்டாலினா என்பதை வரும் தேர்தலில் மக்கள் சொல்வார்கள். நாம் ஆட்சிக்கு வந்த பிறகு, ஜென் சி இளைஞர்களை கவர,ஆங்கிலமும், தமிழும் கலந்த எக்ஸ் பதிவு போடும் காமெடி பற்றி பேசவரவில்லை. ஆனால், சட்டமன்ற விவகாரத்தை இளைஞர்களும்,பெண்களும் கவனிக்கத்தொடங்கியுள்ளனர்.

இதுவெல்லாம்யாரால் நடந்தது என தெரியுமா?

.ஜி.ஆர்., அளவுக்கு நான் இல்லை. ஆனால், எம்.ஜி.ஆர்., அண்ணா ஆகியோரின் வழியில் நான் இருப்பேன். நீங்கள் அமைத்து கொடுத்திருக்கும் இந்த ஆட்சியில் நன்மைகளை பார்ப்பீர்கள் எனும் நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

என்னை கேலியும், கிண்டலும்செய்பவர்கள் தயவு செய்து நிறுத்திவிடாதீர்கள். அதுதான் எனக்கு சக்தியை கொடுக்கும். நீங்கள் பேசுவதன் மூலமே நான் மக்களுக்கு நல்லது செய்துகொண்டே இருப்பேன். அதிகாரம் செய்பவர்களும்,ஆதிக்க சக்திகளும் தான் கோட் - சூட் போட வேண்டுமா? நாமெல்லாம் போடக்கூடாதா? நான் போடும் கோட் - சூட் நிறமும் நம்மை போலவே எந்த ஒளிவுமறைவுமற்ற கருப்பு வெள்ளைதான்.

எனக்கு எதிரிகளே இல்லையா என்றால், அப்படி நான் நினைக்கவில்லை. இப்போதும்நான்சொல்கிறேன், அரசியலில் திமுகவுக்கும் - திமுகவுக்கும் இடையேதான் போட்டி. இதற்கிடையில்,மற்றவர்களுக்கு வேலையே இல்லை. இந்த திமுகவும், மற்றும் பலரும் சேர்ந்துக்கொண்டு விஜய் வந்துவிடக்கூடாது என ஐந்து நாட்கள் ஆட்டம் போட்டார்கள்.

உங்களுக்கு நல்லது செய்ய வந்த விஜய்யா, அல்லது என்னை ஆட்சி அமைக்கக்கூடாது என நினைத்த ஸ்டாலினா என்பதை வரும் தேர்தலில் மக்கள் சொல்வார்கள். நாம் ஆட்சிக்கு வந்த பிறகு, ஜென் சி இளைஞர்களை கவர,ஆங்கிலமும், தமிழும் கலந்த எக்ஸ் பதிவு போடும் காமெடி பற்றி பேசவரவில்லை. ஆனால், சட்டமன்ற விவகாரத்தை இளைஞர்களும்,பெண்களும் கவனிக்கத்தொடங்கியுள்ளனர். இதுவெல்லாம் யாரால் நடந்தது என தெரியுமா?

உண்மையில் மக்கள் மனசை புரிந்துவைத்திருந்தால் மக்களை இப்படி பேசமாட்டீர்கள். அவர்களுக்கு வாக்களித்தவர்கள் எல்லாம் நல்லவர்களாம், நமக்கு வாக்களித்தால் கெட்டவர்கள் என்றும்,தற்குறிகள் என்றும் பேசுகிறார்கள்.அண்ணாஆரம்பித்த கட்சியை அடிமையாக்கியது யார் சார்? திமுக தோற்றதற்கு காரணம் உங்கள் குடும்பத்தை கேளுங்கள் என உங்கள் உடன் பிறப்புகள் சொல்கிறார்கள். நீங்கள் மக்களை தப்பாக பேசினால் இந்த விஜய் கேட்பான். இது இன்று மட்டுமல்ல என்றும் இதுதான் நிலை.

நாம் ஆட்சிக்கு வருவதற்கு முன் நம்மைதடுக்க என்னென்ன சதிகள் எல்லாம் நடந்தது. ஆக்கப்பூர்வமான எதிர்க்கட்சியாக செயல்பட்டு மக்கள் மனதை வெல்ல பாருங்கள். 200 யூனிட் மின்சாரம் தொடர்பாக அறிவித்தோம். அதில் 100 யூனிட்மின்சாரம் திமுககொடுத்தது அல்ல, ஜெயலலிதா கொடுத்தது. ஆட்சி போன மனவேதனையில் ஸ்டாலின் அறிக்கையாக அடித்துக்கொண்டிருக்கிறார். மக்களுக்கு தொல்லையாக இருந்த டாஸ்மாக்கை மூடினேன். விவசாயிகள் கடனை முடிந்த அளவிற்கு தள்ளுபடி செய்துள்ளேன். சட்டம் ஒழுங்கு சரியில்லை என திமுகவும், மற்றும் பலரும் சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள். ஆனால், மாடல் அரசு கடந்த ஆட்சியில் போதை பொருளை முனையிலேயே கிள்ளி எறிந்திருந்தால், குழந்தைகளையும், பெண்களையும் நாம் இழந்திருப்போம். எல்லா பழியையும் என் மீது போடுகிறீர்கள். இதற்காகத்தான் திறமையான காவல்துறையினரை நியமித்துள்ளோம். அடுத்த வாரம் சிங்கப் பெண் அதிரடி படை ஆரம்பிக்கிறோம். மக்களுக்காக நாம் இவ்வளவு செய்யும்போது, குதிரை பேரம் நடத்துகிறோம் என்கிறார்கள். ஆனால், திமுகவும், அதிமுகவும் சேர்ந்து ஆட்சி அமைக்க திட்டமிட்டார்கள். திமுக தற்போது தீயசக்தி மட்டுமல்ல மக்களைவிட்டு தூரம் சென்ற சக்தி. நாம் சாதி, மதம், பணம் கொடுத்து வாக்குகளை வாங்குவதை உடைத்திருக்கிறோம். நதி நீர் உரிமைகளை விட்டுக்கொடுக்க மாட்டோம்" என பேசினார்.

# வணிக பயன்பாட்டு சிலிண்டர் விலை ரூ.42 உயர்வு: ஜெட் எரிபொருள் விலை 27% குறைப்பு



புது டெல்லி:

19 கிலோ எடை கொண்ட வணிக பயன்பாட்டுக்கான சிலிண்டர் விலை ரூ.42 உயர்த்தப்பட்டு ரூ.3113.50 ஆக நிர்ணயி க்கப்பட்டுள்ளது.

சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலையில் ஏற்படும் மாற்றங்கள் அடிப்படையில் வீட்டு உபயோக சமையல் எரிவாயு சிலிண்டர் மற்றும் வணிக பயன்பாட்டுக்கான சமையல் எரிவாயு சிலிண்டர் ஆகியவற்றின் விலையை எண்ணெய் நிறுவன ங்கள் அவ்வப்போது நிர்ணயித்து வருகின்றன.

இதன்படி 19 கிலோ எடையுள்ள வணிக பயன்பாட்டிற்கான சமையல் எரிவாயு சிலிண்டர் விலை 42 ரூபாய் உயர்த்தப்பட்டுள்ளது. இதன்படி 19 கிலோ எடை கொண்ட வணிக பயன்பாட்டிற்கான சமையல் எரிவாயு சிலிண்டர் விலை ரூ.3113.50 உயர்த்தப்பட்டுள்ளது. அதேபோல் 5 கிலோ எடை கொண்ட சமையல் எரிவாயு சிலிண்டர் விலை ரூ.11 உயர்த்தப்பட்டு ரூ.821.50 ரூபாயாக நிர்ண யிக்கப்பட்டுள்ளது.

வணிக பயன்பாட்டு சிலிண்டர் விலை உயர்த்தப்பட்ட நிலையில், வீட்டு உபயோக சமையல் எரிவாயு சிலிண்டர்களின் விலையில் மாற்றம் செய்யப்படவில்லை.

அதேபோல, சர்வதேச விமானங்களுக்கான ஜெட் எரிபொருள் விலை 27% குறைக்கப்பட்டு ள்ளது. சர்வதேச விமானங்களுக்கான எரிபொருள் விலை, ஒரு கிலோலிட்டருக்கு சுமார் 400 டாலர் குறைக்கப்பட்டு, சுமார் 1,100டாலர் ஆக உள்ளது. இது இந்திய ரூபாய் மதிப்பில் ஒரு கிலோலிட்டருக்கு ரூ.1,05,000 ஆக உள்ளது.

வணிகப் பயன்பாட்டு சிலிண்டர்களின் விலை உயர்ந்துள்ள போதிலும், வீடுகளில் பயன்படுத்தப்படும் 14.2 கிலோ எல்பிஜி சிலிண்டர்களின் விலையில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை.

சாதாரண வீட்டு உபயோகசமையல் எரிவாயு சிலிண்டர்களின் கட்டணங்கள் அனைத்து முக்கிய நகரங்களிலும் தற்போதைக்கு மாற்றமின்றி நிலையாகவே தொடர்கின்றன.

இந்த 19 கிலோ எடையுள்ள வணிகப் பயன்பாட்டு சிலிண்டர்கள் முக்கியமாக ஹோட்டல்கள், உணவகங்கள், சாலையோர உணவகங்கள் மற்றும் பிற வணிக நிறுவனங்களால் பயன்படுத்தப்படுகின்றன.

அதேபோல், மானியம் இல்லாத வீட்டு உபயோகப் பிரிவின்கீழ் வராத நுகர்வோரால் இந்த 5 கிலோ எடையுள்ள எஃப்டிஎல் (FTL) சிலிண்டர்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

சர்வதேச எரிசக்தி சந்தையில் நிலவும் ஏற்ற இறக்கங்களுக்கு மத்தியில், நாட்டின் எரிபொருள் பாதுகாப்பை உறுதி செய்ய அரசு தீவிர நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இதன் ஒரு பகுதியாக, எண்ணெய் நிறுவனங்கள் தங்களின் வசம் குறைந்தபட்சம் 30 நாட்களுக்குத் தேவையான எல்பிஜி இருப்பை (LPG Reserve) பராமரிக்க அரசு உத்தரவிட்டுள்ளது.

தற்போது நாட்டில் எரிபொருள் விநியோகத்தில் எவ்வித தட்டுப்பாடும் இல்லை என்றும், விநியோகக் குறைபாடுகளைத் தடுக்கத் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

சர்வதேச எரிபொருள் குறியீடுகள், சரக்குக் கட்டணம் மற்றும் அந்நியச் செலாவணி மதிப்பு ஆகியவற்றின் அடிப்படையிலேயே இந்த வணிக சிலிண்டர் விலைகள் மாதந்தோறும் மாற்றியமைக்கப்படுகின்றன.

## வரி விளம்பரங்கள்



தினத்தளம்
DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் | ஆண்டு விழா |
| திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள் |
| ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன் |
| வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் | |

தொடர்புக்கு : ☎ +919444082959

# தமிழகத்தில் 22 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு

சென்னை:

கேரளம் மற்றும் தமிழக பகுதிகளில் அடுத்த 2 நாட்களில் தென்மேற்கு பருவமழை தொடங்கும் நிலையில், தமிழகத்தில் 22 மாவட்டங்களில் நாளை கனமழை பெய்ய வாய்ப்புள்ளது என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தென்மேற்கு பருவமழை கேரள மாநில பகுதிகளில் அடுத்த 2 நாட்களில் தொடங்கவாய்ப்புள்ளது. தெற்கு கேரளம் மற்றும் அதனை ஒட்டிய தமிழக பகுதிகளின் மேல் சுமார் 1.5 கிமீ உயரம் வரை ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது.

தென்கிழக்கு அரபிக்கடல் மற்றும் அதனை ஒட்டிய லட்சத்தீவு பகுதிகளின் மேல் சுமார் 3.1 கிமீ முதல் 7.6 கிமீ உயரத்தில் ஒரு வளிமண்டல சுழற்சி



நிலவுகிறது. கிழக்கு விதர்பா முதல் தெற்கு கேரளம் பகுதிகள் வரை தெலங்கானா, ராயலசீமா, தெற்கு உள் கர்நாடகா, தமிழகம் மற்றும் புதுச்சேரி வழியாக சுமார் 1.5 கிமீ உயரம் வரை ஒரு வளிமண்டல காற்றழுத்ததாழ்வுபாதை நிலவுகிறது.

இதன் காரணமாக தமிழகத்தில் (ஜூன் 2) முதல் 7-ம் தேதி வரை ஒருசில இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.தமிழகத்தில் நாளை நீலகிரி, கோவை, திருப்பூர், திண்டுக்கல், தேனி, கரூர், நாமக்கல், ஈரோடு, சேலம்,திருச்சி,தருமபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், வேலூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, மதுரை, விருதுநகர், தென்காசி, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும்.

ஜூன் 3, 4 தேதிகளில் நீலகிரி, கோவை, திருப்பூர், திண்டுக்கல், தேனி, தென்காசி திருநெல்வேலி, கன்னியாகுமரி,ஈரோடு,நாமக்கல், சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், வேலூர், ராணிப்பேட்டை மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் இடி. மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும்.

ஜூன் 5-ம் தேதி நீலகிரி, கோவை,திருப்பூர்,தேனி, தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, திண்டுக்கல், தூத்துக்குடி, விருதுநகர், ஈரோடு, சேலம், நாமக்கல், திருச்சி, அரியலூர், பெரம்பலூர், கள்ளக்குறிச்சி, கரூர், சிவகங்கை, மதுரை, மயிலாடுதுறை மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும்.

## செய்திகள்
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில்
இணையுங்கள்
Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# நாகர்கோவிலில் அதிமுகவிலிருந்து விலகி 50க்கும் மேற்பட்டோர் தவெகவில் இணைந்தனர்



கன்னியாகுமரி மாவட்டம்நாகர்கோவில் மாநகராட்சியின் 9-வது வார்டைச் சேர்ந்த அதிமுக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் 50-க்கும் மேற்பட்டோர் கட்சியிலிருந்து விலகி தமிழக வெற்றி கழகத்தில் (தவெக) இணைந்தனர்.

வட்ட செயலாளர் சசி தலைமையில், வட்ட பிரதிநிதிகள் குமாரவேல், நாகராஜன் மற்றும் வார்டு மகளிர் அணி இணைச் செயலாளர் ராஜேஷ்வரி உள்ளிட்டோர் அதிமுகவிலிருந்து விலகி, தமிழக வெற்றி கழக மாவட்ட செயலாளர் மாதவன் மற்றும் கிழக்கு மாவட்ட இணை செயலாளர்பிரேம் முன்னிலையில் தவெகவில் இணைந்தனர். இந்த நிகழ்வில் இரணியல் லெட்சுமணன், 39-வது வார்டு எம்.ஜி.ஆர். மன்ற இணைச் செயலாளர் கணேசன், பகுதி செயலாளர் ஐயப்பன், வெங்கடேஷ், வெங்கடாச்சலம், சுடலையாண்டி, விஜய், தீபக், ஸ்ரீராம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

நாகர்கோவில் மாநகராட்சியின் 9-வது வார்டைச் சேர்ந்த 50-க்கும் மேற்பட்டோர் தவெகவில் இணைந்தது அப்பகுதியில் அரசியல் வட்டாரங்களில் கவனம் ஈர்த்துள்ளது.



கன்னியாகுமரி மாவட்ட கலெக்டராக புதியதாக பொறுப்பேற்றுள்ள பிரதாப் அவர்களை தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி விவசாய பிரிவு மாநில பொதுச் செயலாளர் ஆர்.எஸ்.ராஜன் மரியாதை நிமித்தமாக சந்தித்து வாழ்த்து தெரிவித்தார்.

# வீடு வீடாகச் சென்று மாணவர் சேர்க்கை விழிப்புணர்வு அரசு நலத்திட்டங்கள், சிறப்பு பயிற்சிகள் குறித்து பெற்றோர்களிடம் ஆசிரியர்கள் நேரடி விளக்கம்



சிவகங்கை மாவட்டம் தேவகோட்டையில் செயல்பட்டு வரும் சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப் பள்ளியில் புதிய கல்வியாண்டிற்கான மாணவர் சேர்க்கையை அதிகரிக்கும் நோக்கில், ஆசிரியர்கள் வீடு வீடாகச் சென்று பெற்றோர்களை நேரில் சந்தித்து விழிப்புணர்வு பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.

பள்ளித் தலைமையாசிரியர் லெ. சொக்கலிங்கம்தலைமையில்ஆசிரியர்கள் ஸ்ரீதர், முத்துமீனாள், முத்துலட்சுமி,வள்ளிமயில் உள்ளிட்டோர் பள்ளி சுற்றுவட்டார குடியிருப்புப் பகுதிகள் முழுவதும் சென்று மாணவர்களின் பெற்றோர்களை சந்தித்து அரசுப் பள்ளிகளில் வழங்கப்படும் கல்வி வாய்ப்புகள் மற்றும் நலத்திட்டங்கள் குறித்து விரிவாக எடுத்துரைத்தனர்.

தமிழக அரசு மாணவர்களுக்கு இலவசமாக வழங்கி வரும் பாடப்புத்தகங்கள்,நோட்டுப்புத்தகங்கள், சீருடைகள், காலணிகள், பள்ளிப் பைகள், வண்ண பென்சில்கள், ஜியாமெட்ரி பாக்ஸ் உள்ளிட்ட கல்வி உபகரணங்கள் குறித்தும், மாணவர்களின் கல்விச் சுமையை குறைக்கும் வகையில் செயல்படுத்தப்படும் பல்வேறு நலத்திட்டங்கள் குறித்தும் விளக்கம் அளிக்கப்பட்டது.

மேலும், பள்ளியில் கல்வியுடன் இணைந்து மாணவர்களின் தனித்திறன்களை வளர்க்க பல்வேறு சிறப்புப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதாக ஆசிரியர்கள் தெரிவித்தனர். குறிப்பாக சர்வதேச அளவிலான போட்டிகளுக்கு நடுவர்களாகச் செல்லும் அனுபவம் வாய்ந்த பயிற்சியாளர்களின் மூலம் வாரந்தோறும் இலவச சதுரங்கப் பயிற்சி வழங்கப்படுவதாகவும், மாணவர்களின் கலைத்திறனை மேம்படுத்தும் நோக்கில் இலவச கீபோர்டு இசைப் பயிற்சியும் தொடர்ந்து அளிக்கப்பட்டு வருவதாகவும் பெற்றோர்களிடம் எடுத்துரைக்கப்பட்டது.

பள்ளியின் கல்வி மற்றும் திறன் மேம்பாட்டு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, நாட்டின் பல்வேறு துறைகளில் சாதனை படைத்த ஆளுமைகள் மாணவர்களுடன் கலந்துரையாடிய நிகழ்வுகளும் நினைவுகூரப்பட்டன. இதுவரை 15-க்கும் மேற்பட்ட மாவட்ட ஆட்சியர்கள், உயர்நிலை காவல்துறை அதிகாரிகள், இஸ்ரோ விஞ்ஞானிகள் மயில்சாமி அண்ணாதுரை, கே. சிவன் உள்ளிட்டோர் பள்ளிக்கு நேரில் வருகை தந்து மாணவர்களுடன் கலந்துரையாடி அவர்களுக்கு ஊக்கமளித்துள்ளனர் என்பதை ஆசிரியர்கள் பெற்றோர்களிடம் தெரிவித்தனர்.

மாணவர்களுக்கு புத்தக அறிவோடு மட்டுமல்லாமல் நடைமுறை வாழ்க்கை அனுபவங்களும் கிடைக்கவேண்டும் என்ற நோக்கில் பல்வேறு களப்பயணங்களும் ஏற்பாடு செய்யப்பட்டு வருவதாக கூறப்பட்டது. வங்கி, அஞ்சலகம், பாஸ்போர்ட் அலுவலகம், அரசு தோட்டக்கலைப் பண்ணை, கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், காவல் நிலையம், நீதிமன்றம், வானொலி நிலையம் உள்ளிட்ட பல்வேறு இடங்களுக்கு மாணவர்கள் அழைத்துச் செல்லப்பட்டு அங்குள்ள செயல்பாடுகள் குறித்து நேரடி அனுபவம் பெறச் செய்யப்பட்டுள்ளதாக விளக்கினர்.

அதேபோல், மாணவர்களின் கற்றல்திறனை மேம்படுத்தும் புதுமையான கற்பித்தல் முறைகள், அறிவியல் கண்காட்சிகள், விளையாட்டுப் போட்டிகள், கலை நிகழ்ச்சிகள், வாசிப்பு இயக்கங்கள், சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் உள்ளிட்ட பல்வேறு செயல்பாடுகளும் பள்ளியில் தொடர்ந்து நடத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது.

பள்ளியின் கல்விச் சாதனைகள், தேர்ச்சி விகிதம், மாணவர்களுக்கான பாதுகாப்பான கற்றல் சூழல், சுத்தமான வளாகம், ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு சேவை உள்ளிட்ட அம்சங்களும் பெற்றோர்களுக்கு விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டன. அரசுப் பள்ளிகள் இன்று தரமான கல்வியை வழங்குவதோடு மாணவர்களின் முழுமையான வளர்ச்சிக்கும் முக்கியத்துவம் அளித்து வருகின்றன என்பதை ஆசிரியர்கள் வலியுறுத்தினர்.

ஆசிரியர்களின் இந்த நேரடி சந்திப்பு மற்றும் விழிப்புணர்வு முயற்சியை பெற்றோர்கள் பாராட்டியதுடன், அரசுப் பள்ளிகளில் கிடைக்கும் கல்வி வாய்ப்புகள் மற்றும் நலத்திட்டங்கள் குறித்து அறிந்து மாணவர்களை சேர்க்க ஆர்வம் தெரிவித்தனர்.

## சுரண்டை அருகே உள்ள குலையநேரி கிராமத்தில்

# கலைஞர் கருணாநிதி பிறந்தநாளை முன்னிட்டு பள்ளி மாணவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கல்



முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, பள்ளி மாணவர்களுக்கு நோட்டுப் புத்தகங்கள் மற்றும் கல்வி உபகரணங்கள் வழங்கும் விழா சிறப்பாக நடைபெற்றது.

சுரண்டை அருகே உள்ள குலையநேரி கிராமத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் ( திமுக) சார்பில் இந்த விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் பள்ளி மாணவர்களுக்குத் தேவையான பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

கல்வி உபகரணங்கள் வழங்கிய சட்டமன்ற உறுப்பினர்: இவ்விழாவிற்கு தென்காசி சட்டமன்ற தொகுதி உறுப்பினர் கலைக்கதிரவன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். அவர், விழாவில் பங்கேற்ற சுமார் 200 பள்ளி மாணவர்களுக்கு பின்வரும் கல்வி உபகரணங்களை வழங்கினார்:

நோட்டுப் புத்தகங்கள் பென்சில் மற்றும் பேனா சிலேடு உள்ளிட்ட பொருட்கள் மாணவர்களிடம் பேசிய சட்டமன்ற உறுப்பினர், இப்பகுதி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் தங்களின் குறைகளை எனது கவனத்திற்கு கொண்டு வரும் பட்சத்தில், அவை உடனுக்குடன் சரிசெய்து தரப்படும் என உறுதியளித்தார்.

கலந்து கொண்ட முக்கியபிரமுகர்கள்:இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை கடையநல்லூர் ஒன்றிய தொழிலாளர் அணி அமைப்பாளர் பத்மநாபன் செய்திருந்தார்.

மேலும், இந்நிகழ்ச்சியில்:சுப்பையாபுரம் திருமலைக்கனி, ஒன்றிய செயலாளர் ஜெயா ஐயப்பன் ,முருகன் நாராயணன், கொத்த னார் ஐயா ச்சாமி, சுரண்டை முத்து குமார், தொழிலதிபர் பாண்டியராஜ் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாகக் கலந்து கொண்டனர். விழாவின் நிறைவாக, கிளைச் செயலாளர் செல்வக்குமார் அனைவருக்கும் நன்றி கூறினார்.

## கன்னியாகுமரி மாவட்டத்தில்

# போதைப்பொருட்களுக்கு எதிரான அதிரடி நடவடிக்கை இரண்டு வாரங்களில் 44 பேர் கைது.



கன்னியாகுமரி மாவட்டத்தில் போதைப் பொருட்களின் நடமாட்டத்தை முற்றிலுமாக ஒழித்து, இளைஞர்கள் மற்றும் பொதுமக்களை போதைப்பழக்கத்தின் பாதிப்பிலிருந்து பாதுகாக்கும் நோக்கில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர். ஸ்டாலின்,அவர்களின் உத்தரவின்பேரில் கடந்த மே 13ஆம் தேதி ஐந்து சிறப்பு தனிப்படைகள் அமைக்கப்பட்டு மாவட்டம் முழுவதும் தீவிர கண்காணிப்பு மற்றும் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தொலைநோக்கு பார்வை,துல்லியமான திட்டமிடல் மற்றும் உறுதியான தலைமையின் காரணமாக, கடந்த இரண்டு வாரங்களில் தனிப்படைகள் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கைகளில் 18 கஞ்சா வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 6 கிலோ 750 கிராம் கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்குகளில் தொடர்புடைய 27 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதேபோல், 17 குட்கா வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 253 கிலோ குட்கா பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இவ்வழக்குகளில் 17 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்மூலம், கடந்த இரண்டு வாரங்களில் மட்டும் 35 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 44 நபர்கள் கைது செய்யப்பட்டதுடன், கணிசமான அளவிலான போதைப்பொருட்கள் மற்றும் தடைசெய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.


போதைப்பொருட்கள் இல்லாத கன்னியாகுமரியை உருவாக்குவது காவல்துறையின் முக்கிய இலக்காகும். போதைப்பொருள் விற்பனை, கடத்தல் மற்றும் பயன்பாட்டில் ஈடுபடுவோர் மீது சட்டப்படி கடுமையான நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்படும்" என மாவட்ட காவல் கண்காணிப்பாளர். உறுதியளித்துள்ளார். போதைப்

பொருட்களுக்கு எதிரான இந்த தொடர் நடவடிக்கைகள் மேலும் தீவிரப்படுத்தப்பட்டு, பாதுகாப்பான மற்றும் போதைப்


பொருட்கள் இல்லாத கன்னியாகுமரியை உருவாக்ககாவல்துறைஉறுதியுடன் செயல்பட்டு வருகிறது.



பல்லடம் பகுதியில் இருந்து மதுரை நோக்கி சென்ற அரசு பேருந்து, தாராபுரம் செல்லும் வழியில் பழுதாகி நின்றது. இதையடுத்து, பயணிகள் பல்லடம் பேருந்து நிலைய அதிகாரிகளிடம் தகவல் தெரிவித்தனர். அதற்கு மாற்று பேருந்து அனுப்பப்படும் என அதிகாரிகள் தெரிவித்ததாக கூறப்படுகிறது. ஆனால், மாலை 5.30 மணி முதல் இரவு 8.30 மணி வரை மாற்று பேருந்து வராததால், ஆத்திரமடைந்த பொதுமக்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர். இதன் காரணமாக தாராபுரம் சாலை வழியாக சென்ற வாகனங்கள் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்த சம்பவத்துக்கு பொதுமக்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.



ஈரோடு மாநகர் பழைய பாளையம் பகுதியில் அமைந்துள்ள மேற்கு சட்டமன்றத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் அலுவலக கட்டிட திறப்பு விழா (31.5.2026) அன்று நடைபெற்றது. இந்தக் கட்டிட திறப்பு விழாவிற்கு தமிழக கைத்தறித்துறை அமைச்சர் விஜய பாலாஜி கலந்துகொண்டு ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். இந்த திறப்பு விழாவிற்கு மேற்கு சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் கே.கே.ஆனந்த் மோகன் மற்றும் தவெக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



கன்னியாகுமரி மாவட்டம் தாய் தமிழகத்துடன் இணைய அரும்பாடுபட்ட மொழிப்போர் தியாகி மார்ஷல் நேசமணி அவர்களின் 58 வது நினைவு தினத்தை முன்னிட்டு கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் மார்ஷல் நேசமணியின் மணிமண்டபத்தில் அமைந்துள்ள அவரது திரு உருவ சிலைக்கு தமிழக அரசின் சார்பில் தமிழக சுற்றுலா துறை அமைச்சர் ராஜேஷ்குமார் மாவட்ட ஆட்சியர் பிராதாப் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (01.06.2026) மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெற்று, குறைகள் கேட்டறிந்தார். உடன் மாற்றுத்திறனாளி நல அலுவலர் பூபதி உள்ளார்.

### ஈரோடு மாவட்ட பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறையின் சார்பில்

## விழிப்புணர்வு பேரணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, கொடியசைத்து துவக்கி வைத்தார்



உலக புகையிலை தினம் மே-31 ஐ முன்னிட்டு, நேற்று (01.06.2026) ஈரோடு மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை பல்நோக்கு உயர் சிகிச்சை பிரிவு வளாகத்தில் ஈரோடு மாவட்ட பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறையின் சார்பில் மாவட்ட புகையிலை கட்டுப்பாட்டு மையம் மற்றும் ஈரோடு கேன்சர் சென்டர் மற்றும் ஈரோடு ரோட்டரி மெட்ரோ சங்க அமைப்பினர்கள் இணைந்து நடத்திய மாவட்ட அளவிலான விழிப்புணர்வு பேரணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, கொடியசைத்து துவக்கி வைத்தார்.

உலக புகையிலை ஒழிப்புதினம் மே மாதம் 31 அன்று உலகம் முழுவதும் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. புகையிலைப் பொருட்களை மனிதர்கள் இரண்டு விதமாக பயன்படுத்துகின்றனர். மென்றுபோடக்கூடிய புகையிலைப் பொருட்களும் புகைக்கக் கூடிய புகையிலைப் பொருட்களும் இதில் அடங்கும். இந்த புகையிலைப் பொருட்களில் 3000 முதல் 4000 வரை நச்சுப் பொருட்கள் அடங்கியுள்ளது. இதில் 200 விதமான விஷ பொருட்கள் மனிதர்களுக்கு புற்றுநோயை ஏற்படுத்தக்கூடிய காரணிகளாக அமைகிறது. இதில் உள்ள நிக்கோட்டின் விஷப்பொருளின் தூண்டுதலால் இளம் வயதினர் அதிகமாக இந்த பழக்கத்திற்கு உள்ளாகின்றனர். இதனால் அவர்களது கல்வி தரம் பாதிப்புக்கு உள்ளாகிறது மற்றும் உடல்நிலை பாதிப்புக்குள்ளாகி நடுத்தர வயது மரண விகிதம் அதிகரிக்கும் சூழ்நிலை உருவாகிறது. இந்தியாவில் மட்டும் புகையிலைப் பயன்பாட்டினால் ஆண்டுதோறும் 10 லட்சம் முதல் 12 லட்சம் வரை இறப்பு விகிதம் உள்ளது. இதனால் நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்படக்கூடிய வாய்ப்பு உள்ளது. ஆகவே இதனை தடுக்கும் பொருட்டு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக ஆண்டுதோறும் மே 31 அன்று உலக புகையிலை எதிர்ப்பு தினமாக கடைபிடிக்கப்படுகிறது. இதன் மூலம் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி புகையிலை பயன்பாட்டினால் ஏற்படும் பாதிப்புகளை உணரச் செய்து இளம் வயதினரை புகையிலை பழக்கத்திலிருந்து மீட்பதும் புகையிலை பயன்பாட்டினால் ஏற்படும் மரண விகிதத்தை குறைப்பதற்காகவும் நடத்தப்படுகிறது. முன்னதாக, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில், உலக புகையினை ஒழிப்பு தினத்தை முன்னிட்டு, உலக புகையிலை ஒழிப்புதின உறுதிமொழியான,

இந்த விழிப்புணர்வு பேரணியானது, ஈரோடு மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை பல்நோக்கு உயர் சிகிச்சை பிரிவு வளாகத்தில் தொடங்கி, பெருந்துறை சாலை வழியாக மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தை வந்தடைந்தது. இதில் பெருந்துறை அரசு செவிலியர் கல்லூரி, சிஎஸ்ஐ செவிலியர் கல்லூரியை சேர்ந்த 300-க்கும் மேற்பட்ட செவிலியர்கள் மற்றும் ஈரோடு கேன்சர் சென்டர், ஈரோடு ரோட்டரி மெட்ரோ சங்க தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் ஈரோடு ராஜயோக பிரம்ம குமாரிகள் தொண்டு அமைப்பினர்கள் கலந்து கொண்டு, "முகத்திரையை கிழித்தெறிவோம் நிக்கோடின் மற்றும் புகையிலை அடிமைத்தனத்திற்கு எதிராக செயல்படுவோம்", "புகைப் படிக்காதே, உன் வாழ்வில் புன்னகையை இழக்காதே", நமக்கு பகை, புகையை தவிர்ப்போம், உயிரை காப்போம்", "புகையிலையை நிறுத்து, நல்வாழ்வை தொடங்கு", "புகைக்காதே, புகைக்காதே புற்று நோயை வாங்காதே" உள்ளிட்ட வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தி விழிப்புணர்வு ஏற்படுத்தி சென்றனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கிரண் ஸ்ருதி இணை இயக்குநர் மருத்துவ பணிகள் (பொ) மரு.இரா.வெங்கடேசன், மாவட்ட சுகாதார அலுவலர் மரு. பு.அருணா, ஈரோடு மாநகர நகர் நல அலுவலர் மரு.கௌரிசங்கர் மற்றும் ஈரோடு கேன்சர் சென்டர், ஈரோடு ரோட்டரி மெட்ரோ சங்க தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், ஈரோடு ராஜயோகபிரம்மகுமாரிகள் தொண்டு அமைப்பினர்கள் மற்றும் தொடர்புடைய துறை சார்ந்த அரசு அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## நந்தா பொறியியல் கல்லூரிக்கு அகில இந்திய தொழில்நுட்ப நிறுவனத்தின் கீழ் 90 இலட்சம் நிதி



புது தில்லியில் இயங்கிவரும் இந்திய அரசின் அகில இந்திய தொழில்நுட்பஆலோசனைசபையின் உறுதுணையுடன் மாணவர்களின் புதிய சிந்தனையினைத் தூண்டி தொழில்நுட்ப படைப்புகளை மேம்படுத்தும் பொருட்டு "ஏஐசிடிஈ ஐடியா லேப்" என்கிற பெயரில் நவீன தொழில் நுட்ப ஆய்வகத் துவக்க விழா இனிதே நடைபெற்றது.

தலைவர் இத்துவக்க விழாவிற்கு ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் வி.சண்முகன் தலைமை தாங்கினார். மேலும்விழாவில்தமிழ்நாட்டின் மாநில அறிவியல் மற்றும் தொழில் நுட்ப கழக செயலாளர் முனைவர் எஸ். வின்சென்ட் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு நவீன தொழில் நுட்ப ஆய்வகத்தினை ரிப்பன் வெட்டி துவக்கி வைத்தார்.

இதற்காக இந்தியாவில் செயல்பட்டு வரும் நன்கு ஆய்வகம் மற்றும் வகுப்பு வசதிகள் கொண்ட பொறியியல் கல்லூரியினைத் தேர்ந்தெடுத்து ரூபாய் 90 இலட்சம் நிதி ஆதாரத்தினை அகில இந்திய தொழில்நுட்ப ஆலோசனை சபை வழங்கி வருகிறது. இதன் அடிப்படையில் நந்தா பொறியியல் கல்லூரிக்குநிதிகிடைத்திருப்பது பெருமை சேர்த்துள்ளதாக ஸ்ரீநந்தா கல்வி அறக்கட்டளையின் தலைவர் வி.சண்முகன் தனது செய்தி குறிப்பில் தெரிவித்திருந்தார்.

இத்தகைய நிதி உதவியின் மூலம் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் ஆராய்ச்சியினை ஊக்குவித்து செய்முறை மற்றும் புதிய தொழில்நுட்ப படைப்புகள், தயாரிப்பு மற்றும்தொழில்முனைவோர்திறன்களைமேம்படுத்துதல் போன்றவற்றில் ஈடுபடும் ஆர்வத்தினை தூண்டுகிறது. மேலும் பட்டப்படிப்பினை மேற்கொள்ளும் போது ஆராய்ச்சியில் எதிர்கொள்ளக் கூடிய சவால்களைமுறியடித்து மாணவர்கள் தங்களைத் தயார்படுத்திக் கொள்ள வாய்ப்புகளை வழங்குகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

அகில இந்திய தொழில்நுட்ப ஆலோசனை சபையின் மூலம் ரூபாய் 90 இலட்சம் நிதி உதவி பெருவதற்கு உறுதுணையாக செயல்புரிந்த முதல்வர் முனைவர் யு.எஸ். ரகுபதி, புல முதல்வர்கள் முனைவர் சி.என். மாரிமுத்து, முனைவர் எம் ஈஸ்வரமூர்த்தி மற்றும் மாணவர்களுக்கு ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் அங்கத்தினர் பானுமதி சண்முகன், இணை நிர்வாக அறங்காவலர்களான எஸ்.நந்தகுமார் பிரதீப்,எஸ்.திருமூர்த்தி, மற்றும் நந்தா தொழில்நுட்ப வளாகத்தின் நிர்வாக அலுவலர் ஏ.கே. வேலுசாமி ஆகியோர் தங்களது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்கள்.



உலகப் புகையிலை ஒழிப்பு தினத்தை முன்னிட்டு ஈரோடு பேருந்து நிலையத்தில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்வில் தமிழக கைத்தறித்துறை அமைச்சர் விஜய் பாலாஜி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். அப்போது பிரம்ம குமாரிகளின் சபை மூலம் வாகன விழிப்புணர்வு ஊர்வலத்தையும் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் பொது மக்கள் பலர் கலந்து கொண்டனர்.

### ஈரோடு மாவட்டத்திற்கு சமூக நீதித்துறை அமைச்சர் வன்னி அரசு

## ஆசனூர் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட மேல்நிலைப் பள்ளியில் பயின்று நொய்டாவில் உள்ள IITTM நிறுவனத்தில் உயர்கல்வி பயிலச் செல்லும் மாணவர்களை பாராட்டி நலத்திட்ட உதவிகளை வழங்கினார்



சமூக நீதித்துறை அமைச்சர்வன்னிஅரசு அன்று (31.05.2026) தாளவாடி வட்டம், ஆசனூர் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட மேல்நிலைப் பள்ளியில் பயின்று நொய்டாவில் உள்ள IITTM நிறுவனத்தில் உயர்கல்வி பயிலச்செல்லும் மாணவர்களை பாராட்டி நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

சமூக நீதித்துறை அமைச்சர் பேசும் போது தெரிவித்ததாவது,

ஈரோடு மாவட்டம், தாளவாடி வட்டம், ஆசனூர் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட மேல்நிலைப் பள்ளியில் பயின்று உயர்கல்வி பயிலச் செல்லும் மாணவர்களுக்கான பாராட்டு விழா நடைபெற்றது. பொருளாதார வசதி இல்லாத காரணத்தால் எந்த மாணவரும் உயர்கல்வியை இழக்கக்கூடாது என்பதில் தமிழ்நாடு அரசு உறுதியாக உள்ளது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைசார்பில் பல்வேறு கல்வி உதவித்தொகைத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், உயர்கல்வி பயிலும் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு ரூ.40 லட்சம் வரையிலும், பழங்குடியினர் மாணவர்களுக்கு ரூ.10 லட்சம் வரையிலும், கல்வி உதவித்தொகைகள் வழங்கி வருகிறது, மாணவர்கள் இந்த வாய்ப்புகளை முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். கல்வி மட்டுமே சமூக முன்னேற்றத்திற்கான மிகப்பெரிய ஆயுதம். பழங்குடியினர் மற்றும் ஆதிதிராவிட சமூக மாணவர்கள் உயர்கல்வி மூலம் வாழ்க்கையில் உயர்ந்த நிலையை அடைய வேண்டும். மாணவர்கள் புத்தக வாசிப்பை பழக்கமாக்கி அறிவாற்றலை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தினார். 2025-26 கல்வியாண்டில் 12ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வு எழுதிய 37 மாணவர்களும்தேர்ச்சி பெற்றுள்ளனர். 12ஆம் வகுப்பு மாணவர்களின் உயர்கல்வி தேர்ச்சி பெற்ற 37 மாணவர்களில் 16 மாணவர்கள் உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு சார்ந்த பயிற்சிகளுக்காக தேர்வுசெய்யப்பட்டுள்ளனர். குறிப்பாக, IITTM (Indian Institute of Tourism and Travel Management) நிறுவனத்தில் சேர்க்கை பெற்றுள்ளனர். இதுபோன்ற நுழைவுத்தேர்வில் வெற்றி பெற்று அனைத்து மாணவ, மாணவியர்களும் வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என தெரிவித்தார்.

முன்னதாக சமூக நீதித்துறை அமைச்சர் அவர்கள் தாளவாடி வட்டம் மாவனத்தம் பகுதிகளில் மரக்கன்றுகளை நட்டு வைத்தும், விதைகளை மண்ணில் விதைத்தார். பொதுமக்களுடன் கலந்துரையாடி குறைகளை கேட்டறிந்து, உடனடியாக தீர்வு காணப்படும் என்று தெரிவித்தார். மேலும், விவசாயிகளுக்கு விதை பயிர்கள் அடங்கிய நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்வின் போது ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, பவானிசாகர் சட்டமன்ற உறுப்பினர் வி.பி.தமிழ்செல்வி, இயக்குநர், பழங்குடியினர் நலத்துறை சு.அண்ணாதுரை, துணை இயக்குநர் (சத்தியமங்கலம்) வன கோட்டம் கௌதம், துணை இயக்குநர் (ஆசனூர்) வன கோட்டம் யோகேஷ் குமார் கார்க், ஈரோடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் கு.மகேஸ்வரி உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ஈரோடு கலெக்டர் ச.கந்தசாமி தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்; பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில்நேற்று(01.06.2026) மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

இக்குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு கல்வி உதவித்தொகை, மகளிர் உரிமைத்தொகை, முதியோர் உதவித்தொகை, இலவச வீட்டுமனை பட்டா, தனிப்பட்டா மாறுதல், மின்னணு குடும்ப அட்டை, மின் இணைப்பு, மேல்நிலை நீர்தேக்க தொட்டி, தெரு விளக்கு, ஆக்கிரமிப்பு மற்றும் காவல் துறை நடவடிக்கை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் எனமொத்தம்255மனுக்கள் வரப்பெற்றன. பொதுமக்கள் அளித்த பல்வேறு கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பெற்று உரிய துறை அலுவலர்களிடம் வழங்கி அவற்றின் மீது உடனடி நடவடிக்கை எடுத்திட உத்தரவிட்டார்.

நேற்றைய தினம். மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் குழந்தைத் தொழிலாளியாக பணிபுரிந்து மீட்கப்பட்ட செல்வன். துளசி மணிகண்டன், த/பெ சந்தானம் மறுவாழ்வு நிவாரணத் தொகையாக ரூ.55,000/- வழங்கி மேலும், குழந்தைத் தொழிலாளியாக பணிபுரிந்து மீட்கப்பட்ட செல்வன். துளசி மணிகண்டன் தற்போது இளங்களைபொறியியல் பட்டம் இரண்டாம் ஆண்டு பயின்று வருவதை அறிந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் புத்தகத்தினை பரிசாக வழங்கி வாழ்வில் முன்னேற கல்வியின் அவசியம் குறித்து அறிவுரைகளை வழங்கி வாழ்க்கையில் மேலும் முன்னேறதனது வாழ்த்துக்களைத்தெரிவித்தார். தொடர்ந்து இன்றைய தினம் வழங்கப்பட்ட கோரிக்கை மனுவின் மீது உடனடி தீர்வாக லக்காபுரம் பகுதியை சேர்ந்த முனிச்சாமி என்ற மாற்றுத்திறனாளிக்கு ரூ.9,300 மதிப்பிலான மூன்று சக்கர மிதிவண்டியினவழங்கினார்.

இக்கூட்டத்தில்,தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) செல்வராஜ். மாவட்ட வழங்கல் அலுவலர் ராம்குமார், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் ஜாகீர் உசேன், தொழிலாளர் நலத்துறை உதவி ஆணையர் ஜெயலட்சுமி,உட்பட அனைத்துத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# சிவகங்கை பழனி ஆண்டவர் கோவிலில் வைகாசி உற்சவ விழா



சிவகங்கை நகர் ஆவரங்காடு மாணிக்கவாசகர் தெருவில் அமைந்துள்ளது அருள்மிகு ஸ்ரீ பரமசிவ ஞானகிரி பழனி ஆண்டவர் திருக்கோயில். சிவகங்கை நகரில் உள்ள மிகவும் பழமை வாய்ந்த இந்தக் கோவிலில் வைகாசி விசாக பால்குட உற்சவம்சிறப்பாகநடைபெற்றது. கடந்த 22. 05. 2026 அன்று காப்பு கட்டுதலுடன் தொடங்கிய இந்த விழாவில் கடந்த எட்டு நாட்களிலும் சிறப்பு வழிபாடுகள் அபிஷேகங்கள் மற்றும் ஆராதனைகள் தொடர்ந்து நடைபெற்றது. பின்னர் 29.05.2026 அன்று நடைபெற்ற விழாவில் வைகாசி விசாகத்தை முன்னிட்டு சிவகங்கை தெப்பக்குளத்தில் இருந்து திரளான பக்தர்கள் பால்குடங்கள் , சந்தனக் குடங்கள் , அலகு குத்துதல் மற்றும் காவடிகள் எடுத்து அங்கிருந்து ஊர்வலமாக புறப்பட்டனர். இந்த ஊர்வலமானது அரண்மனை வாசல் - தொண்டி ரோடு - போஸ் ரோடு - கண்ணன் தெரு - வல்லபாய் தெரு மற்றும் வேலுநாச்சியார் தெரு ஆகியவற்றின் வழியாக மாணிக்கவாசகர் தெருவில் உள்ள கோவிலை சென்றடைந்தது. அப்போது வழி நெடுகிலும் வான வேடிக்கைகள் நடைபெற்றது. இரவு தொண்டி ரோட்டில் அமைந்துள்ள அன்னபூரணி ஹோட்டல் உரிமையாளர் அவர்களால் பக்தர்களுக்கு இரவு உணவு வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து டி.என். அன்புத்துரை அவர்கள் நடுவராக இருந்து நடத்தப்பட்ட சிறப்பு பட்டிமன்றம் நடைபெற்றது. இதன் மறுநாள் 30.05.2026 அன்று காலையில் பழனி ஆண்டவருக்கு சந்தன காப்பு பழங்கள் காப்பு பால் காப்பு போன்ற பல்வகை காப்பு அபிஷேகங்கள் நடைபெற்றது. இதில் ஆயிரக்கணக்கில் பக்தர்கள் திரண்டு வழிபாடுகள் செய்தனர். பகல் 12:00மணிக்கு இராமநாதபுரம் இளைய மன்னர் ஆர். பாபுசண்முகநாத சேதுபதி அவர்களால் வழங்கப்பட்ட அன்னதானம் நடைபெற்றது. இரவு பக்தி பாடலுடன் கூடிய கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. விழாவிற்கான ஏற்பாடுகளை கோவில் நிர்வாகிகள், விழா கமிட்டியாளர்கள் மற்றும் ஆவரங்காடு பொதுமக்கள் ஒன்று சேர்ந்து சிறப்பாக செய்திருந்தனர்.



தமிழக வெற்றி கழகத்தின் சார்பில்சுதந்திர போரட்ட வீரர் அஞ்சலை அம்மாள் அவர்களின் 136 வது பிறந்தநாள் விழா மத்தியமாவட்ட் செயலாளர்சாமுவேல்ராஜ்தலைமையில் மீன்வளத்துறை அமைச்சர் ஸ்ரீநாத் அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள் நிகழ்ச்சியில் எஸ்டிஆர் விஜய் சீலன் மாவட்ட துணைச் செயலாளர் கோல்டன் மாவட்ட பொருளாளர் சிவகுமார் மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் அனுசியா ஜனோஜ் சித்ரா சதீஷ்குமார் பகுதி செயலாளர்கள் முத்துபாலன் சதீஷ் ராமசந்திர்ன் இளைஞர் அணி சுபாகர் மாணவர் அணி முருகன் வழக்கறிஞர்கள் அணி தாஸ் முருகன் மற்றும் வட்டச் செயலாளர்கள் உள்பட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

## உலக சைக்கிள் தினத்தை முன்னிட்டு

# போதைப்பொருளுக்கு எதிரான விழிப்புணர்வு, பெண் குழந்தைகள் பாதுகாப்பு விழிப்புணர்வு சைக்கிள் பேரணி நடைபெற்றது



உலக சைக்கிள் தினத்தை முன்னிட்டு, கோவையில் போதைப்பொருட்களுக்கு எதிராகவும், பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பை வலியுறுத்தியும் குழந்தைகள், சமூக ஆர்வலர்கள் விழிப்புணர்வு சைக்கிள் பேரணி மேற்கொண்டனர். ஆண்டுதோறும் ஜூன் 3-ஆம் தேதி உலக சைக்கிள் தினம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இந்த சைக்கிள் தினத்தை முன்னிட்டு கோவையில் சமூக ஆர்வலர்கள், சிறார்கள்மற்றும்பெண்கள் கலந்து கொண்ட விழிப்புணர்வு சைக்கிள் பேரணி நடைபெற்றது. தமிழ்நாட்டில் போதைப்பொருள் கலாச்சாரத்தை ஒழிக்க வேண்டியும், பெண்கள் மற்றும் பெண் குழந்தைகள் பாதுகாப்பை வலியுறுத்தியும் நடைபெற்ற இந்த சைக்கிள் பேரணியை துணை ஆட்சியர் ஹரிப்பிரியா, காவல் துணைக் கண்காணிப்பாளர் காயத்ரி ஆகியோர் கொடியசைத்து தொடங்கிவைத்து,சைக்கிள் பேரணியிலும் கலந்து கொண்டனர்.

இதுகுறித்து பேசிய சைக்கிள் பந்தய வீரரும் சமூக ஆர்வலருமான ஜி.டி. விஷ்ணு ராம், "போதைப்பொருள் சமூகத்தில் ஒழிக்க வேண்டிய ஒன்று. இதனை பயன்படுத்துவோருக்கு உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் பாதிப்புகள் ஏற்படுகின்றன. இது அவர்களைக் கடந்து, சமூகத்திற்கும் மோசமான பின்விளைவுகளை ஏற்படுத்துகின்றன. இதனால் பெண்களுக்கும் மற்றும் பெண் குழந்தைகளுக்கும் பாதுகாப்பு கேள்விக்குள்ளாகிறது. எனவே போதைப்பொருள் கலாச்சாரத்தை தடுக்கும் விதமாகவும், பெண்கள் மற்றும் பெண் குழந்தைகள் பாதுகாப்பை வலியுறுத்தியும் இன்று நாங்கள் சைக்கிள் பேரணி மேற்கொண்டோம். இந்த சமூகத்தில் பெண்களுக்கு ஆண்கள் பாதுகாப்பாக இருக்கவும், போதை பொருள் தடுப்பில் ஈடுபட்டு, ஒழுக்கத்தை கட்டமைக்கின்ற விளையாட்டில் ஆர்வம் செலுத்த வேண்டும் என வலியுறுத்துகிறோம். கோவை நவஇந்தியா பகுதியில் தொடங்கிய எங்கள்சைக்கிள்பேரணி கருமத்தம்பட்டி வரை சென்று மீண்டும் இதே பகுதியில் நிறைவடைந்தது. 50 கிலோமீட்டர் தூரம் நடைபெற்ற இந்த பேரணியில் பங்கேற்றவர்களுக்கு பதக்கங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது." இவ்வாறு விஷ்ணு ராம் கூறினார்.

# காங்கிரஸ் தலைவர் மீது கொலை முயற்சி தாக்குதல் திமுக முன்னாள் அமைச்சர் மீது எஸ்.பி.யிடம் புகார்!



தூத்துக்குடியில் காங்கிரஸ் மாநகர மாவட்டத் தலைவர்மீதானகொலை முயற்சிச் சம்பவத்திற்குத் தூண்டுதலாக இருந்ததாகக்கூறி,முன்னாள் அமைச்சர்அனிதா ராதாகிருஷ்ணன் மீது எஸ்பியிடம் புகார் மனு அளிக்கப்பட்டுள்ளது.

மாநகர மாவட்டத் தலைவர் எஸ்.எம். சகாயராஜ் அளித்துள்ள அந்த மனுவில் கூறியிருப்பதாவது: அண்மையில் ராகுல் காந்தியை அவதூறாகப் பேசிய அனிதா ராதாகிருஷ்ணனைக் கண்டித்து காங்கிரஸ் சார்பில் அறவழியில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. இதனை மனதில் வைத்துக்கொண்டு, அனிதா ராதாகிருஷ்ணன் மற்றும் அவரது உறவினர் உமரி சங்கர் ஆகியோரின் தூண்டுதலின் பேரில் காங்கிரஸ் கட்சியினருக்குத் தொடர்ந்து அச்சுறுத்தல்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் தொடர்ச்சியாக, கடந்த மே 20, 2026 அன்று இரவு, திமுகவைச் சேர்ந்த சிலர் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட காங்கிரஸ் ஆட்டோ தொழிலாளி காமராஜின் ஆட்டோவைச் சேதப்படுத்தியுள்ளனர். மேலும், பயங்கர ஆயுதங்களுடன் அவரது வீட்டிற்குள் நுழைந்து அவரைக் கொலை செய்ய முயன்றபோது,காமராஜ் கதவை பூட்டிக்கொண்டு அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார்.

இச்சம்பவம் குறித்து தென்பாகம் காவல் நிலையத்தினர் வழக்குப்பதிவு செய்து, தாக்குதல் நடத்திய 2 பேர் உட்பட 3 பேரைக் கைது செய்துள்ளனர். கைதானவர்கள் போக, இச்சம்பவத்திற்குப் பின்னணியில் இருந்து தங்களது கூலிப்படை மூலம் தொடர்ந்து கொலை மிரட்டல் விடுத்து வரும் முன்னாள் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன், உமரி சங்கர் ஆகிய இருவரையும் இந்த வழக்கில் முக்கியக் குற்றவாளிகளாகச் சேர்த்துச் சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். என மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வின் போது, காங்கிரஸ் மாவட்ட செயலாளர் கோபால், ராகுல் காந்தி அமைப்புசாரா கட்டுமான தொழிலாளர் சங்கம் செயலாளர், முன்னாள் மாநகராட்சி கவுன்சிலர் டி. சாமுவேல் ஞானதுரை, தலைவர் செல்வசேகர், இணைச் செயலாளர் பலவேச கார்த்திகேயன், துணைத் தலைவர் சுடலைமணி, துணை செயலாளர் ஞானமுத்து, மற்றும் காங்கிரஸ் நிர்வாகிகள் பாலகிருஷ்ணன் அழகுராஜ் கிருஷ்ணன் அய்யாதுரை ஜோதி மகாலட்சுமி உள்பட பலர் உடனிருந்தனர்.

# தென்காசி கிழக்கு தவெக நகரம் சார்பில் நீர்மோர் பந்தல்



தென்காசி நகர தவெக (கிழக்கு ) சார்பில் நீர்மோர் பந்தலை மாவட்ட செயலாளர் ராஜபிரகாஷ் துவக்கி வைத்தார்

தமிழக வெற்றி கழக தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான விஜய் உத்தரவின் பேரில் பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த் வழிகாட்டுதலுடன் தென்காசி மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட தென்காசி கிழக்கு நகரம் சார்பில் கட்சி அலுவலகம் முன்பு அமைக்கப்பட்டிருந்த நீர்மோர்பந்தலைகிழக்கு நகர செயலாளர் நண்பா சங்கரபாண்டியன் தலைமையில், மாவட்ட இணை செயலாளர் சிவா, மாவட்ட பொருளாளர் மாரியப்பன் முன்னிலையில்,மாவட்ட கழகசெயலாளர் ராஜபிரகாஷ் ரிப்பன் வெட்டி திறந்து வைத்து பொதுமக்களுக்கு நீர்மோர், தர்பூசணி ஆகியவற்றை வழங்கினார்,

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் முத்துக்குமார், மாவட்ட செயற்குழு உறுப்பினர் ராபின், மேலகரம் பேரூர் கழக செயலாளர் சந்தன மாரி மாவட்ட மகளிர் அணி சாந்தி, மாவட்ட இளைஞரணி இணை அமைப்பாளர் பிரகாஷ், தென்காசி நகர நிர்வாகிகள் அன்பு பாலா, பரதன், ரபிக், சித்திக், வினோத், சுதன், கார்த்திக் , சுப்பிரமணியன், மகேஷ், சக்தி, உதயகுமார், முத்துக்குமார், மாரி, மற்றும் கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# தூத்துக்குடியில் அமைச்சர் ஸ்ரீநாத் அரசு பொது மருத்துவமனைக்கு ஆய்வு செய்தார்



தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் சட்டமன்ற உறுப்பினரும் - மீன்வளத்துறை அமைச்சருமான ஸ்ரீநாத் அரசு மருத்துவமனையில் நள்ளிரவு 12:30 மணி அளவில் திடீர் ஆய்வு செய்தார். அப்பொழுது அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளிகளிடம் குறைகளை கேட்டு அறிந்தார்கள் மேலும் அங்கு பணியில் ஈடுபட்டிருந்த மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் அனைவரிடமும் குறிப்புகளை, மருத்துவ வசதிகள் மற்றும் நோயாளிகளை பற்றி ஆய்வு நடத்தினார்

மேலும் அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளியிடம் தங்கள் குறைகளை தன்னிடம் எப்பொழுது வேண்டுமானாலும் தெரிவிக்கலாம் மேலும் என்னென்ன வசதிகள் செய்திட வேண்டும் என்பதையும் கேட்டறிந்தார் குறிப்புகளை உடன் வந்த அவரது நேர்முக உதவியாளர்கள் குறித்துக் கொண்டார்கள் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் அமைச்சர் உறுதி அளித்தார்

# Trump Wants Arab States to Recognize Israel. The War Has Made That Harder.



*As President Trump worked in recent days toward a deal to end his war with Iran, he threw a curveball: Arab states as well as Pakistan and Turkey should consider it mandatory to welcome the agreement by establishing diplomatic relations with Israel under the president's Abraham Accords.*

*For much of the Gulf, the proposal only added insult to injury. U.S. relations with the region have been shaken by the war, which created major costs and inflamed U.S. allies' security concerns. Analysts said Arab leaders are increasingly distrustful of both the U.S. and Israel and fear that normalization would further antagonize Iran, which has shown its capability and willingness to attack Gulf states with thousands of drone and missile strikes.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.